# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



25

**நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு), திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி அவர்களின் நடவடிக்கைகள்**

பிறப்பிப்பவர் : திருமதி ஆ. மணிமேகலை, B.E.,

நாள் 12.02.2020

ந.க. எண் 6084/2019 திலிம3

பொருள் : கட்டிடம் - திருநெல்வேலி மண்டலம் - தூத்துக்குடி மாவட்டம் - திருச்செந்தூர் வட்டம் - திருச்செந்தூர் பேரூராட்சி - கீழத்திருச்செந்தூர் கிராமம் - சர்வே எண் 837/7 - 20250.00 சமீ பரப்பு கொண்ட இடத்தில் (ஆலந்தலை) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் 8 பிளாக்குகளில் 512 குடியிருப்புகள் 19330.56 சமீ பரப்பளவில் தரைதளம் மற்றும் மூன்று தளங்கள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்ட கட்டிட அனுமதி வழங்கிட இசைவு மற்றும் மனை ஒப்புதல் வழங்கப்படுகிறது.

படிக்க :

1. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் கடிதம் ந.க. எண் 413(A) /உபொ(தி) /2019, நாள் 26.11.2019 மற்றும் 06.02.2020
2. Senior Planner, Tamil Nadu Slum Clearance Board, dated 16.10.2019
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 4367/2019 நஊ2, நாள் 31.10.2019
4. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 21.01.2020
5. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019

------

**ஆணை**

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், திருச்செந்தூர் பேரூராட்சி, கீழத்திருச்செந்தூர் கிராமம், சர்வே எண் 837/7-ல் 20250.00 சமீ பரப்பளவுள்ள மனையிடத்திற்கு "ABCDEF" என எல்கையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் 8 பிளாக்குகளில் 512 குடியிருப்புகள் 19330.56 சமீ பரப்பளவில் தரைதளம் மற்றும் மூன்று தளங்கள் கொண்ட தொகுப்பு கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதற்கு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டிட அனுமதி வழங்கிட இசைவும் அளிக்கப்படுகிறது. கட்டிட அனுமதி இசைவளிக்கப்பட்ட வரைபடத்திற்கு **க.வ/ம (திலி) எண் 8அ, 8ஆ/2020** என எண்ணிடப்பட்டுள்ளது.

23/5/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

Scanned by CamScanner

**சிறப்பு நிபந்தனைகள் :**

1. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி /திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி /திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
2. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
3. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/ developer and also the architects/ Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
4. உத்தேச கட்டட மனையிடத்தில் பொதுமக்களுக்கு எளிதில் தெரியும் வகையில் பலகை அமைத்து ஒப்புதல் வரைபடத்தின் படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Set Back) வாகன நிறுத்தம், நகர் ஊரமைப்பு துறை ஒப்புதல் எண் /நாள், உள்ளாட்சி கட்டட அனுமதி எண் /நாள் மற்றும் அனைத்து விபரங்களும் குறிப்பிட்டு பார்வைக்கு வைத்தல் வேண்டும்.
5. உத்தேச கட்டுமானத்தின் மொத்த மேற்கூரைப்பரப்பில் 1/3rd பரப்பிற்கு குறையாத அளவில் Solar Energy System அமைக்கப்படல் வேண்டும்.
6. இடஅமைப்பு வரைபடத்தில் கண்டுள்ளவாறு Open Space Reservation பகுதியினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும். (The proposals of Tamil Nadu Slum Clearance Board (TNSCB) are Government agencies bound to form the roads, parks and hand them over to the local body at the end of execution of project)
7. This order is passed subject to the outcome of the Madras High Court Madurai Bench writ petition W.P. (MD) No. 8948 of 2019

(Signature) 23/5/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

நிபந்தனைகள் :

1. உத்தேச தொகுப்பு குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar Assisted Water Heating System அமைப்பு அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகன நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றம் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தில் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும் அரசாணை எண் 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11.10.2002-ன் படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர், தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் தீயணைப்பு துறையின் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண் 341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 03.11.2004-ன் படி செப்டிக் டேங்கில் 'U' Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது உத்தேச நிலத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.
12. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)-ன் படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.
13. கட்டிடம் கட்டப்படும்போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

நன்னிலை வரித்தொகை ரூ. 51,500/- (ரூபாய் ஐம்பத்து ஒன்றாயிரத்து ஐநூறு மட்டும்) அரசு கணக்கில் 03.02.2020-ல் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 5-ல் கண்டுள்ள அரசாணையின் படி காட்சி பலகை வைப்புத் தொகை (Display Board Deposit) ரூ.10,000/- 12.02.2020-ல் இவ்வலுவலக வங்கி கணக்கில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

23/5/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

Scanned by CamScanner

முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இதனை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அனுப்பிட உள்ளாட்சி நிர்வாக அதிகாரி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் உள்ளாட்சியை அணுகிடவும், செயல் அலுவலர், திருச்செந்தூர் பேரூராட்சி மேற்கொண்டு வரைபடத்துடன் உத்தரவினை மனுதாரருக்கு வழங்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
திருநெல்வேலி - 5.

இணைப்பு
இரண்டு தொகுப்பு வரைபடங்கள்

பெறுநர்
செயல் அலுவலர்
திருச்செந்தூர் பேரூராட்சி
தூத்துக்குடி மாவட்டம்

நகல்

1. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் திருநெல்வேலி - 7 } செயலாணை கடிதம் மட்டும்

2. தொழில் நுட்ப வைப்பறை - 1

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

Scanned by CamScanner

33

மழைநீர் சேகரிப்போம்

நீர்வளம் காப்போம்

**திருச்செந்தூர்சிறப்புநிலை பேரூராட்சி**
**செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்**

முன்னிலை:— க.கோபால் ,எம்.ஏ,

க.ம.எண் :143/2019-2020

நாள் : 23.03.2020

| | |
|---|---|
| பொருள் : | கட்டிட உரிமம் – திருச்செந்தூர் பேரூராட்சி – 16 வது வார்டு – சூசை குடியேத்து (ஆலந்தலை) – கீழதிருச்செந்தூர் கிராமம்– சர்வே எண். 837/7 ல் குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதித்து ஆணையிடுதல் – சார்பு. |
| பார்வை | தங்களது கட்டிட உரிம விண்ணப்பம் நாள்.18.02.2020 |

**உத்திரவு :**

கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்ட 16 வது வார்டு சூசை குடியேத்து (ஆலந்தலை)கீழதிருச்செந்தூர் கிராமம் சர்வே எண். 837/7 – 20250.00ச.மீ பரப்பு கொண்ட இடத்தில் (ஆலந்தலை) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் 8 பிளாக்குகளில் 512 குடியிருப்புகள் 19330.56 ச.மீ பரப்பளவில் தரைதளம் மற்றும் மூன்று தளங்கள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது

1. இந்த அனுமதி 23.03.2020 முதல் 22.03.2023 வரை அமுலில் இருக்கும்.
2. இத்துடன் அங்கீகாரம் செய்து அனுப்பப்பட்டிருக்கும் வரைபடத்தின்படி கட்டிடம் கட்ட வேண்டும். வரைபடத்தை ஸ்தலத்தில் பேரூராட்சி அதிகாரிகள் பார்வையிடும்படி தொங்கவிட வேண்டும்.
3. இப்பொழுது கட்டபோகும் கட்டிடத்தில் வேறு எந்தவிதமான விஸ்தரிப்போ அல்லது மாறுதலோ செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய சீர்திருத்தப்பட்ட வரைபடங்களுடன் பேரூராட்சி அலுவலத்தில் விண்ணப்பம் செய்து உத்திரவு பெற்ற பிறகு தான் கட்டிடம் கட்ட வேண்டும்.
4. வாசற்படிகள், கதவுகள், கைப்பிடிச்சுவர், மதில்சுவர் பால்கனி மாடிக்கு செல்லும் படிக்கட்டுகள் ஆகியவை சொந்த நிலத்திற்குட்படிருக்க வேண்டியது. பேரூராட்சி அல்லது சர்க்கார் இடத்திலோ பொதுப்பாதையிலோ யாதொரு எவ்விதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
5. வரைபடத்தில் குறிப்பிட்டப்படி சுகாதார முறையில் பேரூராட்சி சுகாதார பணியாள் வருவதற்கு வசதியாக தகுந்த முறையில் ஜலத்தாரைகள் கட்ட வேண்டும்.
6. சமையல் அறையில் புகை கூண்டுகள் கட்ட வேண்டும்.
7. கழிவுநீரை பேரூராட்சி வாறுகாலில் விடுவதற்கு வசதியாக தகுந்த முறையில் ஜலத்தாரைகள் கட்ட வேண்டும்.
8. காற்று வசதிகளுக்குண்டான சன்னல், வெண்டிலேட்டர் முதலியபவைகள் போதியபடி அமைக்க வேண்டும்.
9. பொது சுகாதார சட்டம் 26, 33 -வது செக்ஷன் அலுவலர் மற்றும் செயல் அலுவலரிடம் சர்டிபிகேட் வாங்கி பின் வீட்டில் குடியேற வேண்டும்.
10. விதிமுறைக்கு மாறாக விண்ணப்பிக்கப்பட்டிருக்கும் கட்டிட வரைபடம் பேரூராட்சி அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக தெரிய வருமானால் மேற்படி கட்டிட அனுமதியை ரத்து செய்து விட அலுவலருக்கு முழு அதிகாரமுண்டு.
11. கட்டிட வேலை நடைபெறும்போது மணல்,சிமெண்ட்,மரம் போன்ற கட்டுமான சமான்கள் பொதுப்பாதையில் குவித்து வைப்பது கூடாது. சொந்த இடத்திலேயே சேகரித்து வைக்க வேண்டும்.
12. கட்டுமான வேலை நடைபெறும்போது ஏற்படும் கழிவு பொருட்களை பேரூராட்சி பொதுப்பாதைகளிலோ,சர்க்கார் இடத்திலோ போட கூடாது.
13. வேலை முடிந்த 15 தினங்களுக்கு வேலை முடித்த விபரத்தை எழுத்து முலமாக பேரூராட்சி அலுவலருக்கு தெரிவிக்க வேண்டியது உரிமம் வழங்கப்பட்ட காலத்திற்குள் வேலை முடியாவிட்டால் உரிமம் காலாவதி ஆவதற்கு 30 தினங்களுக்கு முன்பாக மனு செய்து கட்டிட உரிமத்தை உரிய கட்டணம் செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு உத்திரவு வாங்குமுன் யாதொரு வேலையும் செய்யக் கூடாது. குறிப்பிட்ட காலத்தில் கட்டிட உரிமம் புதுப்பிக்காவிடில் மறுபடியும் புதிதாக வரைப்படத்துடன் அனுமதி பெற வேண்டும்,
14. நெடுஞ்சாலை துறை சாலையில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லாமல் கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதி

23/5/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Boar
Tirunelveli Division.

35

அளிக்கப்படுகிறது.

15. காம்பவுண்ட் சுவர் கட்டும் சமயம் பொது பாதைக்கு இடையூறு இல்லாமலும் காம்பவுண்ட்க்கும் ரோட்டுக்கும் 2அடி விட்டு சுவர் கட்டிக் கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.

16. கட்டிடம் கட்டும் பொழுது மின்வாரிய ஸ்டே கம்பி மற்றும் அருகில் மனுதி இடத்திற்கு எவ்வித இடையூறும் இல்லாமல் கட்டிக் கொள்ள வேண்டியது

17. மேற்காண் நிபந்தனைகளை மீறும் பட்சத்திலோ அல்லது பணிகளில் ஏதேனும் ஆட்சேபனையோ அல்லது இடங்கள் தொடர்பான தாவா பிரச்சினை ஏற்படுமாயின் திருச்செந்தூர்பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து எவ்வித அறிவிப்புமின்றி எந்த நேரமும் தங்களுக்கு வழங்கப்பட்ட இந்த உத்திரவை தானாகவே ரத்து செய்யப்பட்டதாக் கருதப்படும்.

18. வரைபட அனுமதி கட்டணம் ரூ.2829352/- வரைவோலை எண். 001678/05.03.2020 வங்கிபெயர். HDFC Bank மட்டும் செ.சீ. எண்.,3169/2019-20 நாள்.23.03.2020வசூலிக்கப்பட்டது.

19. மழைநீர் கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டும், குறைந்த பட்சம் வீட்டுக்கொரு மரம் வளர்க்க வேண்டும்.

20. உரிய விதிமுறைப்படி தகுதி வாய்ந்த பொறியாளரின் ஆலோசனைப்படி நிறுவப்பட வேண்டும். அவ்வாறு நிறுவப்படாமல் பின்னர் ஏதேனும் விளைவுகள் ஏற்பாடுமாயின் அதற்கு தாங்களே முழு பொறுப்பாவீர்கள். பேரூராட்சி நிர்வாகம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது

21 மேலும் குடியிருப்பு அனுமதி பெற்று இதர உபயோகத்திற்கு செயல்படுத்தபட்டால் கட்டிட உரிமம் எவ்வித அறிவிப்புமின்றி தங்களுக்கு வழங்கப்பட்ட கட்டிட அனுமதி தானாகவே ரத்து ஆகிவிடும்.

சிறப்பு நிபந்தனைகள்

1. உத்தேச தொகுப்பு குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar Assisted Water Heating System அமைப்பு அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகன நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன் படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது மாற்றம் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தில் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும் அரசாணை எண். 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் தீயணைப்பு துறையின் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண். 341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.11.2004 ன் படி செப்டிக் டேங்கில் U Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Brick

23/5/2020

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.

மற்றும்Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது உத்தேச நிலத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.
12. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு25 (Water Act) ன்படி மேற்படி வாரிய இணக்கம் (Consent)பெறப்பட வேண்டும்,
13. கட்டடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.
14. இவ்வரைபட மதிப்பீட்டில் 1 சதவீதம் Tamil Nadu Manual Workers General Welfare fund Bank name. Union Bank of india Account no.530601010038239 Branch name. Chennai என்ற வங்கிகணக்கில் செலுத்தப்பட வேண்டும் . அவ்வாறு செலுத்தப்படவில்லை என்பது தெரியவரும் பட்சத்தில் கட்டட உரிமம் ரத்து செய்யப்படும்.

**இணைப்பு:** அங்கீகரிக்கப்பட்ட வரைபடம்

செயல் அலுவலர்
திருச்செந்தூர் சிறப்புநிலை பேரூராட்சி

பெறுநர் :
நிர்வாக பொறியாளர் ,
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்
திருநெல்வேலி–7

EXECUTIVE ENGINEER
Tamilnadu Slum Clearance Board
Tirunelveli Division.



# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate